**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 116/2023 நாள் 22.01.2026.**

**வாசா.1, திரு.தங்கராஜ்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 4 முதல் 11 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் சத்திரப்பட்டியில் சொந்தமாக மிஷின்தறி கூடம் வைத்து கூலி அடிப்படையில் பேண்ட்டேஜ் துணி நெய்துவருகிறேன். நான் சொந்தமாக 8 மிஷின்தறி வைத்து அதில் 6 பேர் கூலி வேலை பார்க்கிறார்கள். நான் தனியாக வெளியில் எங்கும் வேலைக்கு செல்லவில்லை. எனது சொந்த மிஷின்தறி கூடத்தில் எனக்கு தனிப்பட்ட முறையில் நாள் ஒன்றுக்கு ரூ.600 கூலியாக கிடைக்கும். நான் கூலிக்கு 6 ஆட்கள் வைத்து வேலை பார்த்து வருவதன் மூலம் எனக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும். எனக்கு தனியாக வங்கி கணக்கு உள்ளது. என்னுடைய வரவு செலவு கணக்குகளை நான் வங்கி மூலமாக தான் செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்தும் நபர் அல்ல. வழக்கை தாக்கல் செய்துகொள்ள வழக்கறிஞரிடம் நான் தான் விபரம் சொன்னேன். இறந்துபோன கடனாளி சித்திரபுத்திரன் என்பவர் 100 க்கு மேற்பட்ட புள்ளிகளை சேர்த்து சந்தா மற்றும் சீட்டு தொழிலை செய்துவந்ததாக நான் வழக்குரையில் பாரா 6 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சித்திரபுத்திரன் என்பவர் சந்தா மற்றும் சீட்டு தொழில் நடத்தி வந்ததிலும் அவருடைய மகளுக்கு திருமணம் செய்து வைத்த வகையிலும்அவருக்கு ரூ.1 கோடி வரை கடன் இருந்ததாக வழக்குரையில் பாரா 10 ல் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சித்திரபுத்திரன் யார் யாருக்கு எல்லாம் கடன் கொடுக்க வேண்டியுள்ளதோ அவர்கள் அனைவரும்சேர்ந்து என்னை இந்த வழக்கை தாக்கல் செய்து கொள்ளும் படி சொல்லியிருந்தார்களா என்று கேட்டால் இல்லை. சித்திரபுத்திரன் யார் யாருக்கெல்லாம் கடன் கொடுக்க வேண்டியிருந்ததோ அவர்கள் அனைவரையும் நான் இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சித்திரபுத்திரன் பல நபர்களுக்கு கடன் கொடுக்க வேண்டியதாய் உள்ளது என்றும் அவருடைய சொத்தின் மதிப்பு மிகவும் குறைவு என்றும் எனவே கடன் கொடுத்தவர்களுக்கு விகிதாசாரம் மூலமாக பணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என்று அனுமதி கேட்டு அவருடைய வாரிசுகள் யாரும் எந்தவிதமான வழக்கையும் தாக்கல் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதி சமுத்திரக்கனி என்பவர் சித்திரபுத்திரன் என்பவரின் மனைவியாவார். 2, 3 பிரதிவாதிகள் சித்திரபுத்திரனின் வாரிசுகள். சித்திரபுத்திரனும் நானும் 1 முதல் 3 எதிர்வாதிகளும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். சித்திரபுத்திரன் ஒரு வகையில் எனக்கு தூரத்து உறவினர் என்றால் அப்படியில்லை. 2ம் வாதி ராஜேந்திரன் என் மருமகன். அவர் என்மகளை திருமணம் செய்துள்ளார். நான் இவ்வழக்கில் 2ம் வாதிக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். 2ம் வாதியும் மிஷின்தறி சொந்தமாக வைத்து கூலி

அடிப்படையில் பேண்ட்டேஜ் துணி நெசவு செய்து வருகிறார். 2ம் வாதியானவர் தனியாக மிஷின்தறி கூடம் வைத்துள்ளார். 2ம் வாதிக்கு சொந்தமாகவும், கூலி வேலை மூலமாகவும் வைத்துதொழில் செய்துவருவதில் மாதம் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும். என் வயது தற்போது 67. நான் கடந்த 25 ஆண்டு காலமாக கூலி அடிப்படையில்பேண்ட்டேஜ் நெசவு தொழிலை செய்து வருகிறேன். எனக்கு மிஷின் தறி தொழில் கூடம் வேலை தவிர வேறு தொழில் கிடையாது. எனக்கு மிஷின் தறி கூடம் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர வேறு வருமானம் இல்லை. நான் சித்திரபுத்திரனிடம் சீட்டு எதுவும் போடவில்லை. சந்தா கொடுத்து நான் அதை திரும்ப வாங்கிவிட்டேன். 2ம் வாதி என் மருமகன் சுமார் 15 ஆண்டு காலமாக மிஷின் தறி கூடம் வைத்து தொழில் செய்து வருகிறார். வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகள் வழக்கறிஞர் வைத்து கட்சி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதியான சமுத்திரக்கனி என்பவர் பிராது சொத்துக்களை விற்று கடனை அடைப்பதற்கு விகிதாச்சாரப்படி கடன் தொகை அடைப்பதற்கு வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்டுக்கொண்டாரா என்று கேட்டால் அப்படி எதுவும் இல்லை. வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 புரோ நோட்டுக்களை எழுதியது யார் என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 புரோ நோட்டுக்களை சித்திரபுத்திரன் என்பவர் தான் எழுதிக் கொண்டுவந்தார். வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 புரோ நோட்டுக்களை சித்திரபுத்திரன் என்பவர் தான் எழுதிக் கொண்டுவந்தார் என்ற விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை. வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 புரோ நோட்டுக்களை சித்திரபுத்திரன் என்பவர் தான் எழுதிக் கொண்டுவந்தார் என்று நான் சொல்லும்போது அதில் யார் எழுதினார் , யார் கையெழுத்துகளை போட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சாட்சிகள் கையொப்பம் செய்ததை எனக்கு தெரியும். சித்திரபுத்திரன் வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 ஆவணங்களை கொடுக்கும் போதே அவர் கையொப்பம் செய்து வந்து தான் கொடுத்தார் என்றால் அப்படியில்லை என் முன்னிலையில் தான் அவர் கையொப்பங்களை செய்து கொடுத்தார். வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 புரோ நோட்டுக்களை சித்திரபுத்திரன் இறந்த பிறகு நாங்களும் 1 முதல் 3 எதிர்வாதிகளும் சேர்ந்து மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. 4 முதல் 11 எதிர்வாதிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய கடன் தொகையை முழுவதுமாக கொடுக்காமல் இருக்கவே 1 முதல் 3 எதிர்வாதிகளும் நானும் சேர்ந்து வாசாஆ.1 , வாசாஆ.2 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. இவ்வழக்கில் உள்ள 4 முதல் 11 வரையிலான எதிர்வாதிகள் தங்களுக்கு சித்திரபுத்திரன் என்பவர் கடன்தொகையை கொடுக்கவேண்டிய வகைக்காக இவ்வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிக்கு எதிராக வாசாஆ.3 ஆவணப்படிக்கு அ.வ.எண்.173/2022 என்ற வழக்கை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்குரையை தான் நான் இவ்வழக்கில் வாசாஆ.3 ஆக நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் இவ்வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் இறுதியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு இவ்வழக்கின் 4 முதல் 11 வரையிலான எதிர்வாதிகள் தாக்கல் செய்திருந்த அந்த வழக்கானது அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பாணை ஆனது என்றால் சரிதான். வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 புரோ நோட்டுக்களின் பேரில் தொகையை வரப்பெறுவதற்காக வேண்டி இவ்வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு எதிராக நான் தனியாக வழக்குஎதையும் தாக்கல் செய்யவில்லை ஆனால் இவ்வழக்கில் சொல்லியுள்ளேன். வழக்கில் உள்ள 12ம் எதிர்வாதி எனக்கு உறவினாரா என்று கேட்டால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. 12ம் எதிர்வாதியான கண்ணன் என்பவரிடமிருந்து சித்திரபுத்திரன் தொகை ரூ.15 லட்சத்தை கடனாக பெற்றாரா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்து விபரத்தை நான் ஆன்லைன் மூலமாக தான் பார்த்து நகல் எடுத்தேன். சித்திரபுத்திரனுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்களை பொறுத்து எனக்கு எப்படி தெரியும் என்று கேட்டால் சித்திரபுத்திரன் உயிருடன் இருந்த போது என் மகளிடம் அடமானம் வைத்த போது கொடுத்த பத்திரத்தை வைத்து நான் தெரிந்து கொண்டேன். என் மகளிடம் சித்திரபுத்திரன் அடமானம் வைத்து பத்திரத்தை கொடுத்திருந்தார் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த வழக்குரையில் சொல்லவில்லை. சொத்து மதிப்பு சான்றிதழ் வாசாஆ.6 யை யார் வாங்கியது என்று கேட்டால் நான் தான் வாங்கினேன். வாசாஆ.6 ல் சொத்தின் மதிப்பாக ரூ.42 லட்சம் காட்டியுள்ளது. வாசாஆ.5 முதல் வாசாஆ.11 வரையிலான ஆவணங்களை 1 முதல் 3 எதிர்வாதிகள் தான் என்னிடம் கொடுத்து அதனை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.12 வழக்கறிஞர் அறிவிப்பானதை இந்த வழக்கை தாக்கல் செய்து கொள்வதற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்டஆவணம் என்று சொன்னால் அப்படியில்லை. நானும் 2ம் வாதியும் சித்திரபுத்திரன் என்பவருக்கு எந்தவிதமான கடன் தொகையும் கொடுக்கவில்லை என்றும் வழக்கில் உள்ள 4 முதல் 11 வரையிலான எதிர்வாதிகளுக்கு கடன் தொகையை முழுவதுமாக செலுத்தாமல் இருந்து கொள்ள வேண்டி நானும் 1 முதல் 3 எதிர்வா்திகளும் சேர்ந்து வாசாஆ.1 முதல் வாசாஆ.12 வரையிலான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. நான் எனக்குரிய வங்கிகணக்கு ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வழக்கை தாக்கல் செய்துகொள்ள எங்களுக்கு வழக்குமூலம் கிடையாது என்று சொன்னால் அது சரியல்ல. வழக்கில் கோரிய பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் அதுசரியல்ல.

**மறு விசாரணை - இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 22nd day of January 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.